Kanton Bern
Canton de Berne

Bildungs- und Kulturdirektion
Amt für Kindergarten, Volksschule und Beratung
(கல்வி- மற்றும் கலாச்சாரப் பகுதி
பாலர்பாடசாலை, மக்கள் பாடசாலை மற்றும்
ஆலோசனைக்கான திணைக்களம்)

Sulgeneckstrasse 70
3005 Bern
+41 31 633 84 51
akvb.bkd@be.ch
www.bkd.be.ch

Bildungs- und Kulturdirektion, Sulgeneckstrasse 70, 3005 Bern

மேலும் விரிவாக்கப்பட்ட ஆதரவு (eU) பெறும் பிள்ளைகள்/
இளையோர்களின் பெற்றோருக்கு

எமது இலக்கம்: 2023.BKD.1231 / 1477762

Bern, 22. சித்திரை 2024

**வழமையான பாடசாலையில் மேலும் விரிவாக்கப்பட்ட ஆதரவு (eU) பெறும் பிள்ளைகளுக்கான மாற்றங்கள்**

அன்பான பெற்றோர்களே

ஆவணி 2024 தொடக்கம் மேலும் விரிவாக்கப்பட்ட ஆதரவுத் திட்டத்தில் (eU) மாற்றங்கள் இடம்பெறும், இது பேர்ண் கல்வி மற்றும் கலாச்சாரப் பகுதியால் (BKD) அனைத்து வழமையான பாடசாலைகளுக்குமாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆகவே தற்போதைய நடைமுறையை மாற்றியமைக்கவுள்ளோம், இதன்மூலம் மேலும் பல பிள்ளைகள் பயனடைவதுடன் பாடசாலைகள் தமது வளங்களை மிகவும் நெகிழ்வாகவும் தமது தேவைக்கேற்றவாறும் பயன்படுத்த முடியும். உங்கள் பிள்ளைக்கும் சில விடயங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.

தற்போது உங்கள் மகள் / உங்கள் மகன் eU எனும் பாடத்திட்டத்தின் பிரகாரம் மேலதிகமாக உதவியைப் பெறுகின்றார். இந்த உதவி உங்கள் பிள்ளைக்கு தொடர்ந்தும் தேவைப்பட்டால், அதுகுறித்து பாடசாலை நிர்வாகம் உங்களுடன் உரையாடிக் கொள்ளும். சிலவேளைகளில் பாடசாலை நிர்வாகம் பாடசாலை வருடம் 2023/2024 க்கு தொடர்ந்தும் உதவி வழங்குவோமென ஏற்கனவே உங்களுக்கு அறிவித்திருக்கலாம். அவ்வாறாயின் அனைத்தும் அதுபோன்றே அமைந்திருக்கும்.

eU உங்கள் பிள்ளையின் ஆதரவுத் தேவைகளை தொடர்ந்தும் நிவர்த்தி செய்து வருகின்றது. இதன்மூலம் பாடசாலை எதிர்காலத்தில் ஒரு வகுப்பில் ஏற்படும் சவாலான சூழ்நிலைகளை மேலும் சிறப்பாகச் சமாளிக்க முடியும். விரிவாக்கப்பட்ட ஆதரவின் பாடங்களை ஒரு வகுப்பில் ஏற்படும் கடினமான சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு பாடசாலை நிர்வாகம் புதிதாகப் பயன்படுத்தலாம். அதாவது, eU-பாடங்களின் உதவியை ஒருவருக்குத் தனியாக, ஒரு குழுவுக்கு அல்லது முழு வகுப்பிற்கும் வழங்கலாம்.

மேலும் விரிவாக்கப்பட்ட ஆதரவுப் பாடத்திட்டத்திற்கு ஒரு வளர்ப்பிற்கு ஆலோசனை வழங்கும் நிலையத்தின் (EB) தெளிவுபடுத்தல் தேவையில்லை. இந்த உதவியை பாடசாலை நிர்வாகம் அங்கீகரித்துள்ளது.

தற்சமயம் உங்கள் பிள்ளைக்கு மேலும் விரிவாக்கப்பட்ட ஆதரவுத் திட்டத்தை நான்கு தவணைகளுக்குப் பின்னர் மேலும் நீடிக்க வேண்டிய தேவை இருந்தால், பாடசாலை நிர்வாகம் இது குறித்து உங்களுடன் உரையாடிக் கொள்ளும். அதேவேளை உங்கள் பிள்ளைக்கு மிகத் தெளிவான முறையில் மாற்றமுள்ள உதவித்தேவைகள் இருப்பதாக சந்தேகிக்கப்பட்டால் மட்டுமே, உங்கள் பிள்ளையை உடனடியாக வளர்ப்பிற்கு ஆலோசனை வழங்கும் நிலையத்தில் பதிவுசெய்ய வேண்டிய தேவை இருக்கும்.

மேலும் விரிவாக்கப்பட்ட ஆதரவுப் பாடத்திட்டம் குறித்து உங்களுக்கு ஏதாவது பொதுவான கேள்விகள் இருந்தால், தயவுசெய்து இதற்குப் பொறுப்பான BKD பணியாளரோடு தொடர்பு கொள்ளவும், Frau Sabine Lütolf, sabine.luetolf@be.ch தொலைபேசி. 031 636 84 72.

முக்கியமாக உங்கள் பிள்ளை குறித்த விடயமாக ஏதாவது கேள்விகள் இருந்தால், தயவுசெய்து நேர-டியாக அதற்குப் பொறுப்பான பாடசாலை நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ளவும். அவர்கள் உங்களுக்கு மேலும் விரிவாக்கப்பட்ட ஆதரவுப் பாடத்திட்டத்தின் திட்டமிட்ட பயன்பாடுகள் குறித்து அறியத்தருவார்கள்.

உங்கள் பிள்ளைக்கு மிகச் சிறப்பான வகையில் ஆதரவு மற்றும் உதவிகளை வழங்குவது, BKD மற்றும் பாடசாலையின் கடமையாகும்.

உங்கள் பிள்ளையின் நலன்களுக்காக தொடர்ந்தும் பாடசாலையுடன் சேர்ந்து சிறப்பான ஒத்துழைப்பு வழங்குவதற்கு நான் உங்களுக்கு இதயபூர்வமாக நன்றி கூறுகின்றேன்.

அன்பு வாழ்த்துக்களுடன்

*பாலர்பாடசாலை, மக்கள் பாடசாலை மற்றும் ஆலோசனைக்கான திணைக்களம்*

Erwin Sommer
அதிபர்